**Series SOS**

**Code No. 6**

Roll No. | | | | | | | |

Candidates must write the Code on the title page of the answer-book.

- Please check that this question paper contains **6** printed pages.
- Code number given on the right hand side of the question paper should be written on the title page of the answer-book by the candidate.
- Please check that this question paper contains **8** questions.
- **Please write down the Serial Number of the question before attempting it.**
- 15 minutes time has been allotted to read this question paper. The question paper will be distributed at 10.15 a.m. From 10.15 a.m. to 10.30 a.m., the students will read the question paper only and will not write any answer on the answer script during this period.

# TAMIL

# தமிழ்

*Time allowed : 3 hours* | *Maximum Marks : 100*

*கொடுக்கப்பட்ட நேரம் : 3 மணி* | *அதிக மதிப்பெண்கள் : 100*

## பகுதி அ

**1.** (அ) கீழ்வரும் வாக்கியங்களில் எவையேனும் **ஐந்து** வாக்கியங்களில் பிழைகளைத் திருத்தி எழுதுக : *5*

(i) மறம் ஏறியவனைக் குழவி கொட்டியது.

(ii) மணத்தில் கருணை நிறைந்தவர் அரம் செய்கின்றனர்.

(iii) சுவரில் இறும்பு ஆனியை அடித்தனர்.

(iv) நிளவானில் பரவை வட்டமிட்டுப் பறந்தது.



www.examrace.com

(v) ஆன் மயிலுக்கு அலகு தோகையாகும்.

(vi) மழைப்பாதையில் பயணம் செய்யப் பறி பயன் படுகிறது.

(vii) பயிர் செழித்து வளரப் புள் பூண்டுகளை அளித்தல் வேண்டும்.

(ஆ) கீழ்வரும் வாக்கியங்களில் எவையேனும் **ஐந்து** வாக்கியங்களில் வல்லின மெய் இட்டு எழுதுக : *5*

(i) உண்மையான கனவு தன்னை தானே நிறைவேற்றி கொள்ளும்.

(ii) நம் கலாச்சாரத்தை சொல்லும் பாடல்கள் நாட்டு புறப்பாடல்களாகும்.

(iii) எதிர்நீச்சல் போட பழகினால் உலகு சிறப்பிடத்தை தந்து போற்றும்.

(iv) நகை சுவை என்பது மனிதவாழ்வை மகிழ்ச்சியடைய செய்யும் மந்திரமாகும்.

(v) உலகில் எந்தமொழியிலும் காண கிடைக்காத அளவு பக்தி பாசுரங்கள் நிரம்பியுள்ள மொழி தமிழ்மொழியாம்.

(vi) நிலவு விண்ணுக்கு தரும் அழகை காவியங்கள் பாடுகின்றன.

(vii) கை தொழில் ஒன்றைக் கற்று கொள்.

(இ) கீழ்வரும் வாக்கியங்களில் எவையேனும் **ஐந்து** வாக்கியங்களைக் கூறியவாறு செய்க : *5*

(i) பாரி பாடத்தை நன்றாகப் படித்தான். (பிறவினையாக்குக)

(ii) "தலைமையாசிரியரைச் சந்தித்து வா" என்று மாணவனிடம் வகுப்பாசிரியர் கூறினார். (அயற்கூற்றாக்குக)

(iii) என் நண்பன் எளியவர்க்கு இரங்குவான். (பொருள் மாறாமல் எதிர்மறையாக்குக)



www.examrace.com

(iv) ஆசிரியர் மாணவனைப் பாராட்டினார். (செயப்பாட்டு வினையாக்குக)

(v) நங்கை நன்றாகப் படித்தாள்; அதனால் முதல் வகுப்பில் வெற்றி பெற்றாள். (கலவை வாக்கியமாக்குக)

(vi) அன்றே அவ்வேலையைச் செய்து முடிப்பதாக முருகன் சபதம் செய்தான். (நேர்க்கூற்றாக்குக)

(vii) புத்தகம் உன்னால் கொடுக்கப்பட்டது. (செய்வினையாக்குக)

(ஈ) பின்வரும் தலைப்புகளுள் ஏதேனும் **ஒன்று** குறித்துக் கடிதம் எழுதுக. 10

உன் வீட்டு நூலகத்திற்குத் தேவையான நூல்களை அனுப்ப வேண்டி பதிப்பகம் ஒன்றிற்கு மடல் வரைக.

**அல்லது**

மழைநீர் சேமிப்பின் அவசியம் குறித்து நண்பனுக்குக் கடிதம் வரைக. (எக்கடிதமாயினும் உமது முகவரி அ. பாரதி/பாரத் 8, அங்காடித் தெரு, சென்னை 600 001 எனக் கொள்க.

## பகுதி ஆ

**2.** கீழ்வரும் பத்தியைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடைதருக. 10

இளைஞர்கள் உடலோம்புவதில் பெருங்கவனம் செலுத்துதல் வேண்டும். உலக இன்பத்தை நேரிய வழியில் நுகர்தற் பொருட்டுக் கடவுளால் அளிக்கப்பட்ட உடைமை இவ்வுடல். அதனை இளமையிலேயே வளப்படுத்திக் கொள்ளல் வேண்டும். உடல்வளம் பெறாத ஒருவன் எச்செல்வம் பெற்றிருந்தாலும் பயன் என்ன ? நல்லுடற் பேற்றிற்கெனப் பெருமுயற்சி செய்ய வேண்டியதில்லை. அவரவர்



www.examrace.com

உடல்நிலைக்கேற்ற வண்ணம் உடற்பயிற்சி செய்தல் வேண்டும். உணவு முறைகள் பெரிதும் கவனிக்க வேண்டியன. பசித்தோற்ற மில்லாதபோது எக்காரணம் கொண்டும் உணவு கொள்ளலாகாது. அதிக உணவு கொள்வதும் கூடாது. நோய்களுக்கும் அகால மரணத்துக்கும் வழிகோலுவது அதிக உணவே. உண்டது செறித்த பிறகே உண்ண வேண்டும். நல்லுணவுடன் நல்லொழுக்கம் பெறுவோமாயின் நோயற்ற வாழ்வெனும் குறைவற்ற செல்வம் பெறலாம் என்கிறார் திரு.வி.க.

**வினாக்கள் :**

(i) இளைஞர்கள் எதில் பெருங்கவனம் செலுத்தல் வேண்டும் ?

(ii) உடலை வளப்படுத்திக் கொள்ள வேண்டியது இன்றியமையாதது. ஏன் ?

(iii) நல்லுடற் பேற்றிற்கென இன்றியமையாதது எது ?

(iv) நோயற்ற வாழ்வு பெற வழிகளும் உணவு முறை பற்றியும் திரு.வி.க. கூறுவன யாவை ?

(v) இப்பத்திக் கேற்ற தலைப்பினைத் தருக.

**அல்லது**

சாலை விதிகளைக் கட்டாயமாக எல்லோரும் மேற்கொள்ள எடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கைகள் குறித்து சாலைப் போக்கு வரத்துத்துறை ஆணையரை நேர்காணல் செய்க.

## பகுதி இ

**3.** கீழ்வரும் தலைப்புகளுள் ஏதேனும் ஒரு தலைப்பில் **மூன்று** பக்க அளவில் கட்டுரை வரைக. *1*

(i) உலகம் வெப்பமயமாதல்.

(ii) சிக்கன வாழ்வே சீரான வாழ்வு.

(iii) கல்வியே செல்வம்.



www.examrace.com

## இலக்கியம்

### பகுதி அ

4. கீழ்வரும் வினாக்களுள் எவையேனும் **இரண்டு** வினாக்களுக்கு விடைதருக.

*10×2=20*

(i) நாடு, சமயம், சாதி இவற்றை அடிப்படையாகக் கொண்டு சமரச உணர்வினின்று மாறுபடுதல் தவறாம் என்று திரு.வி.க. வாதிடுவதனை விளக்குக.

(ii) "தமிழ் உயர்தனிச் செம்மொழி" இத்தலைப்பின் கீழ்ப் பரிதிமாற் கலைஞர் உரைப்பனவற்றைத் தொகுத்து வரைக.

(iii) கவிதையின் இயல்பாக மேனாட்டறிஞர்கள் கூறும் கருத்துகளையும் அவற்றிற்குப் பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை உரைக்கும் மறுப்புகளையும் கட்டுரை வடிவில் வரைக.

(iv) நம் தமிழ் மாந்தர் கடைப்பிடித்து ஒழுகிய ஒற்றுமை உணர்வும் ஈகையும் பற்றி ஒரு கட்டுரை வரைக.

### பகுதி ஆ

5. கீழ்வரும் வினாக்களுள் எவையேனும் **இரண்டு** வினாக்களுக்கு விடைதருக :

*5×2=10*

(i) அறிவுடைமை அதிகாரத்தில் அமைந்துள்ள கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

(ii) இந்தியர் அனைவரும் எவ்வெண்ணத்தைக் கைக்கொள்ளல் வேண்டும் ? ஏன் ?

(iii) வினை முற்றிய தலைவன் தேர்ப்பாகற்குச் சொல்லியதை விளக்கி வரைக.

(iv) மறப்பரிது நும் நன்றி என்று கூறிய அன்னத்திடம் வேலன் கூறிய எழுச்சியுரைகளை இருபது வரிகளில் எழுதுக.



www.examrace.com

6. கீழ்வரும் செய்யுட்பகுதியைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடைதருக : 5

யாருமில்லைத் தானே கள்வன்
தானது பொய்ப்பின் யானெவன் செய்கோ

(i) பாடல்அடிகள் இடம்பெற்ற நூல் எது ? ஆசிரியர் யார் ? 2

(ii) யாருக்கு யார் சொல்லியது ? 2

(iii) சொன்னதன் காரணம் என்ன ? 1

**அல்லது**

'இப்பிறப் பென்ப தொன்றும் இரும்பொறையென்பதொன்றும்
கற்பெனும் பெயர தொன்றும் களிநடம் புரியக் கண்டேன்'

(i) இவ்வடிகள் இடம்பெற்ற நூல் எது ? ஆசிரியர் யார் ? 2

(ii) யார் கூற்று ? யாரிடம் கூறியது ? 2

(iii) யாரிடம் களிநடம்புரியக் கண்டான் ? 1

## பகுதி இ

7. 'சட்டை' — இக்கதையைக் கருப்பொருளும் சுவையும் குன்றாமல் சுருக்கி வரைக. 10

**அல்லது**

'மகன்' — இக்கதையைக் கருப்பொருளும் சுவையும் குன்றாமல் சுருக்கி வரைக.

8. கோமதியின் பாத்திரப்படைப்பை விவரிக்க. 5

**அல்லது**

மூக்கப்பிள்ளையின் பாத்திரப் படைப்பை விவரிக்க.